பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
25 11 2026 WEDNESDAY - 7 15 PM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. அஞ்சல்துறை கட்டமைப்புகளை நவீனப்படுத்துவதற்கான சொத்து மேலாண்மை திட்டத்தை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2. மாற்றுத்திறனாளிகள் கண்ணியமாகவும், சுயசார்புடனும் வாழ்வதற்கு தேவையான சூழலை உருவாக்குவது அவசியம் என்று மத்திய அமைச்சர் திரு நிதின் கட்கரி வலியுறுத்தியுள்ளார்.

3. பாதுகாப்பு சவால்களை ஒருங்கிணைந்து எதிர்கொள்ள இந்தியா உறுதிபூண்டிருப்பதாக தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல் தெரிவித்துள்ளார்

4. பலுசிஸ்தான் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக, பாகிஸ்தான் ராணுவம் நடத்திய தாக்குதலில் 10 பேர் உயிரிழந்தனர்.

5. சையத் மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Tasnim Mir காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

அஞ்சல்துறை கட்டமைப்புகளை நவீனப்படுத்துவதற்கான சொத்து மேலாண்மை திட்டத்தை மேலும் ஐந்தாண்டுகளுக்கு தொடர மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இம்முடிவின் படி, ஆயிரத்து 491 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.
இதன்மூலம், அஞ்சல் துறை கட்டிடங்கள் மறுசீரமைக்கப்படுவதுடன் ஊழியர் குடியிருப்புகள், பாரம்பரிய அஞ்சல் அலுவலகங்கள் பராமரிப்பு உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படும்.
புதிதாக 190 அஞ்சலக கட்டிடங்கள் கட்டப்படுவதுடன், மிகவும் பழமையான 50 அஞ்சலகங்கள் புதுப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அஞ்சலகங்களில் நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தவும் இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.
மேலும், அஸ்ஸாம் மாநிலம், Silchar பகுதியில் 2 ஆயிரத்து 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக பசுமை விமான நிலையம் அமைக்கவும் அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

மாற்றுத்திறனாளிகள் கண்ணியமாகவும், சுயசார்புடனும் வாழ்வதற்கு தேவையான சூழலை உருவாக்குவது அவசியம் என்று மத்திய அமைச்சர் திரு நிதின் கட்கரி வலியுறுத்தியுள்ளார்.
புதுதில்லியில் மாற்றுத்திறனாளிகள் மாநாட்டில் பேசிய அவர், மாற்றுத்திறனாளிகள், ஏழைகள், பெண்கள் உள்ளிட்ட சமுதாயத்தின் நலிந்த பிரிவினரின் முன்னேற்றத்திற்காக அனைத்துத் தரப்பினரும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.
மாற்றுத்திறனாளிகளுக்கு அறக்கட்டளைகள் மூலம், உதவி செய்யும் நிலையை மாற்ற, அவர்கள் சுய வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார வாய்ப்புகளை

பெறுவதற்கான செயல் திட்டங்களை உருவாக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

மாற்றுத்திறனாளிகளுக்கு அவரவர் திறமைக்கு ஏற்ற திறன் பயிற்சிகளை அளிப்பதன்மூலம், அவர்கள் உரிய வேலைவாய்ப்புகளை பெற வழிவகை ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாற்றுத் திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்கள் எளிதில் பயணம் செய்ய ஏதுவாக, பேருந்து பயணத்திற்கான புதிய நெறிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு இருப்பதாகவும் திரு நிதின் கட்கரி தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மத்திய அரசின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தை பஞ்சாப் அரசு செயல்படுத்த வேண்டும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கேட்டுக்கொண்டுள்ளார்.

பஞ்சாபின் *Tarn Taran* மாவட்டத்தில் நடைபெற்ற வேளாண் மாநாட்டில் பேசிய அவர், இதுதொடர்பாக, பஞ்சாப் முதலமைச்சருக்கு தாம் கடிதம் எழுதியிருப்பதாக கூறினார்.

இத்திட்டத்தை செயல்படுத்தினால் வறட்சி, வெள்ள பாதிப்பு உள்ளிட்ட இயற்கை பேரிடர் காலங்களில் விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு கிடைக்க வழிவகை ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பயிரக் கழிவு மேலாண்மை உள்ளிட்ட திட்டங்களுக்காக பஞ்சாப் மாநிலத்திற்கு மத்திய அரசு இந்தாண்டு *286* கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாக அவர் கூறினார்.

விளைப்பொருட்களை குறைந்தபட்ச ஆதரவு விலை மூலம் அதிக அளவில் கொள்முதல் செய்ய அரசு உறுதிபூண்டிருப்பதாக திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் போதைப்பொருள் பழக்கத்திற்கு ஆளாகாமல், நாட்டின் எதிர்காலத்திற்காக பாடுபட வேண்டும் என்று மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி கேட்டுக்கொண்டுள்ளார்.

ஹைதராபாதில் போதைப்பொருள் இல்லாத இந்தியா குறித்த மூன்று நாள் பாத யாத்திரையை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

போதைப்பொருள் பழக்கம், வீடுகள், பள்ளிக்கூடம், அலுவலகம் உள்ளிட்ட இடங்களில் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதிக இளைஞர்களை கொண்ட நாடான இந்தியா, உலகின் வல்லரசாக உருவெடுக்கும் திறனை பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாட்டு மக்கள் அனைவரும் அரசியல், சாதி, மத வேறுபாடுகளை கடந்து, போதைப்பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்க ஒத்துழைக்க வேண்டும் என்றும் திரு கிஷன் ரெட்டி கேட்டுக்கொண்டார்.

>>>>>><<<<<<

பால் உற்பத்தியில் இந்தியா தொடர்ந்து உலகின் முன்னணி நாடாக திகழ்வதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தேசிய பால் தினத்தையொட்டி வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில், *2014-15*-ஆம் ஆண்டில் *146* மில்லியன் டன்னாக இருந்த பால் உற்பத்தி, *2024-25*-ல் *247* புள்ளி எட்டு ஏழு மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் மொத்த பால் உற்பத்தியில் நான்கில் ஒரு பங்கு இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், குஜராத் மற்றும் மகாராஷ்ட்ரா மாநிலங்களில் மட்டும் *54* சதவீதத்திற்கும் அதிகமாக பால் உற்பத்தி செய்யப்படுவதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

பாதுகாப்பு சவால்களை ஒருங்கிணைந்து எதிர்கொள்ள இந்தியா உறுதிபூண்டிருப்பதாக தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல் தெரிவித்துள்ளார்.

மாலே-யில் நடைபெற்ற தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் கூட்டத்தில் பேசிய அவர், இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் உள்ள நாடுகள் தத்தமது பாதுகாப்பை உறுதி செய்வதோடு, பொது நோக்கத்திற்காக அண்டை நாடுகளுடன் இணைந்து பணியாற்றவரும் தயாராக இருப்பதாக கூறினார்.

போதைப்பொருள் கடத்தலை தடுக்க, இலங்கை, மாலத்தீவு உள்ளிட்ட நாடுகளுடன் இணைந்து, இந்தியா கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக திரு அஜித் தோவல் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

இந்தியா – நேபாளம் ராணுவங்களுக்கு இடையிலான கூட்டு பயிற்சி நேபாளத்தின் *Saljhandi* ராணுவ பயிற்சி மையத்தில் இன்று தொடங்கியது.

சூரியகிரண் என்ற பெயரிலான இந்த கூட்டுப்பயிற்சி, அடுத்த மாதம் 8-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

இருநாட்டு ராணுவப் படைகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதுடன், தொழில்நுட்ப ரீதியான புதிய அணுகுமுறைகளை பரிமாறிக் கொள்வதற்கும் ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளதாக நேபாள ராணுவம் தெரிவித்துள்ளது.

அடர்ந்த காடுகளில் மேற்கொள்ளப்படும் ராணுவ நடவடிக்கைகள் மற்றும் பேரிடர் காலங்களில் மனிதநேய உதவிகளை செய்வது தொடர்பான அம்சங்களும் பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

மத்திய அரசுடன் மோதல்போக்கை கடைபிடிக்க விரும்பவில்லை என்று தெலங்கானா முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி தெரிவித்துள்ளார்.

ஹைதராபாதில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மத்திய அரசு மற்றும் அண்டை மாநிலங்களுடன் மோதல் போக்கை கடைபிடிப்பதற்கு பதிலாக, நிர்வாகத்தில் கவனம் செலுத்தவே தாம் விரும்புவதாக கூறினார்.

தாம் தில்லி செல்லும்போதெல்லாம் பிரதமர் திரு நரேந்திர மோடியை சந்தித்து மாநிலத்தின் வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு மத்திய நிதியுதவி மற்றும் அனுமதிகளை பெற்று வருவதாகவும் திரு ரேவந்த் ரெட்டி தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மணிப்பூர், நாகாலாந்து மாநிலங்களின் அமைதி மற்றும் வளர்ச்சிப்பணிகளில் இரு மாநிலங்களும் ஒருங்கிணைந்து செயல்படுவது குறித்து அம்மாநிலங்களின் முதலமைச்சர்கள் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

இம்பாலில், மணிப்பூர் முதலமைச்சர் திரு *Yumnam Khemchand Singh* மற்றும் நாகாலாந்து முதலமைச்சர் திரு *Neiphiu Rio* நடத்திய ஆலோசனையின்போது அண்டை மாநிலங்கள் இடையே பரஸ்பர நம்பிக்கை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதாக, மணிப்பூர் முதலமைச்சர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

பலுசிஸ்தான் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக, பாகிஸ்தான் ராணுவம் நடத்திய தாக்குதலில், 10 பேர் உயிரிழந்தனர், நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பலுசிஸ்தான் மாகாணம், *Mastung* பகுதியில் நடத்தப்பட்ட குண்டுவீச்சு தாக்குதலுக்கு, பலுசிஸ்தான் தேசிய கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

இப்பகுதியில், பாகிஸ்தான் ராணுவம் நடத்திவரும் தாக்குதல்களில் இதுவரை 70 ஆயிரத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதோடு, கட்டிடங்கள், குடியிருப்புகள் பெருமளவு சேதமடைந்துள்ளதாக அந்த கட்சியின் *Abdul Malik Baloch* குற்றம் சாட்டியுள்ளார்.

>>>>>><<<<<<

கேரளம், தமிழகம் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்துக்கு உட்பட்ட மாஹே, காரைக்கால் பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆந்திரப்பிரதேசம், தெற்கு உட்புற கர்நாடகா மற்றும் லட்சத்தீவு பகுதிகளில் நாளை இடி மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் கிழக்கு பகுதியில் உள்ள மாநிலங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு வெப்பநிலை மூன்று டிகிரி செல்சியஸ் அளவுக்கு குறையக்கூடும் என்றும் வானிலை மையம் கூறியுள்ளது.

>>>>>><<<<<<

சையத் மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் *Tasnim Mir* காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.
லக்னோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், *21-17, 21-12* என்ற செட்கணக்கில் இந்தியாவின் *Malvika Bansod*-ஐ வென்றார்.
இரட்டையர் பிரிவுகளில் *Dhruv Kapila – Tanisha Crasto* இணையும், *Ayush Makhija – Anagha Aravinda Bai* இணையும், *Dhruv Rawat – Maneesha* இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

>>>>>><<<<<<

கஜகஸ்தானில் நடைபெற்று வரும் ஆசிய ஹேண்ட் பால் சாம்பியன் போட்டியில், இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை வென்றது.

>>>>>><<<<<<

போபாலில் நடைபெற்று வரும் ஆசிய சாம்பியன் கோப்பை மகளிர் ஹாக்கி போட்டியில் இந்தியா தற்போது ஜப்பானை எதிர்த்து விளையாடுகிறது.

>>>>>><<<<<<

ஹாக்கி போட்டிகளுக்கான சர்வதேச தர வரிசைப் பட்டியலின் மகளிர் பிரிவில் இந்தியா 5வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசைப் பட்டியலின் பந்து வீச்சுப் பிரிவில் இந்தியாவின் பும்ரா இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>*end*<<<<<<<